முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், நாகர்கோவில்

நாள்.04.02.2026

O.S. No.161/2022

வா,சா-1- ஜான்சி

பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை.

நான் ஒய்வு பெற்ற துணை பேராசிரியர் ஆவேன். அண்ணாமலை பல்கலைகழகத்தில் வேலை பார்க்கிறேன். 2022 ம் ஆண்டு யாரோ அடையாளம் தெரியாத நபரகள் அத்துமீறி வீட்டிற்குள் நுழைந்து தொந்தரவு செயத்தார்கள். காவல் நிலையத்தில் நான் மனு கொடுத்தேன். விசாரித்ததில் நீதிமன்றத்தில் பரிகாரம் தேட என்னை அறிவுறுத்தினார்கள். அதனால் வழக்கு தாக்கல் செய்தோன். யார் மீது காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். நான் பிரதி மீது கொடுத்தேன். கொடுத்த புகாருக்கு ஒப்புகை சீட்டு கொடுத்தார்களா என்றால் கொடுத்தார்கள். அதனை இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேனா என்றால் இல்லை. புகார் மனுவை இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளேன்.

நான் சொல்வது போல் 03.09.2022, 12.09.2022 ஆகிய தேதிகளில் பிரதி என்னுடய வீட்டில் நுழைந்து எதுவும் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் குறிப்பிடும் வீடு, எனது தம்பிக்கும், பிரதிக்கு உரிமைப்பட்டது என்றால் சரியல்ல. எனது தம்பிக்கு பாத்தியப்பட்டது, பிரதிக்கு பாத்தியமில்வைல. எனது தம்பி எனக்கு செட்டில்மென்ட் ஏழுதிக்கொடுத்துவிட்டார். 03.09.2022, 12.09.2022 ஆகிய தேதிகளில் பிரதியும், எனது தம்பியும் வழக்கு சொத்தில் குடியிருந்து வந்தார்கள் என்றால் சரியல்ல.

நானும், எனது தம்பியும் குடியிருந்து வந்தோம். எனது தம்பி 2022 ல் விருப்ப ஓய்வு பெற்றார், எனது தம்பி இருதய நோயாளி என்றால் சரி. எனது தம்பிக்கு சிறுநீரக செயலிழப்பு, ஹார்ட் அட்டக், சுகர் , பிரசர், ஆகிய நோய்கள் இருந்தது. ஒய்வு பெற்றதிலிருந்து எனது தம்பி

வழக்கு சொத்தின் வீட்டில் வசித்து வந்தாரா என்றால் ஆமாம். என்னுடன் வசித்து வந்தார். நான் திருமணம் ஆனவர். எனது கணவர் சென்னையில் வசித்து வருகிறார். எனது கணவருக்கு சென்னையில் வீடு இல்லை. அவர் Softwate Engineer ஆவார். எனக்கு சொந்தமாக எத்தனை வீடுகள் உள்ளது என்றால் வழக்கு சொத்து வீடு ஒன்று மட்டும் உள்ளது. சிதம்பரத்தில் வீடு இல்லை. அங்கு வாடகை வீட்டில் குடியிருந்தேன்.

உண்மையில் எனக்கு சிதம்பரத்தில் ஒரு வீடும், நாகர்கோவிலில் ஒரு வீடும், நிலமும், எனது கணவருக்கு சென்னையில் ஒரு வீடும் உள்ளது என்றாலும், நான் வழக்கிற்காக அதனை மறைத்து வழக்கு சொத்து வீட்டை மட்டும் எனது வீடாக நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனது கணவருக்கு சொந்த ஊர் மதுரை ஆகும். எனது கணவர் நல்ல வசதியான குடும்பத்தை சேர்ந்தவர்கள் என்றாலும் அவருக்கு மதுரையிலும், சென்னையிலும் பல சொத்துகள் உள்ளது என்றால் சரியல்ல. நான் அவரை விட்டு பிரிந்து இருக்கிறேன்.

முறைப்படி விவாகரத்து பெற்றேனா என்றால் எனது கணவர் வாங்கி வைத்துள்ளார். அந்த விவரம் எனது கணவரின் உறவினர்கள் என்னிடம் சொன்னார்கள். எனது கணவர் எனக்கு எதிராக பல வழக்குகள் உள்ளதால் என்னை விட்டு பிரிந்து சென்று விட்டார் என்றாலும் விவகாரத்து பெறவில்லை என்றாலும் சரியல்ல. நான் பல்கலைகழகத்தில் வேலை பார்த்த போது பல மாணவர்களுக்கு சீட்டு வாங்கி கொடுத்தேனா என்றால் இல்லை. ஒரு மாணவருக்கு நான் பரிந்துரை செய்தேன். அது தொடர்பாக வழக்கு தாக்கல் செய்து நிலுவையில் உள்ளது.

(கற்றறிந்த வாதி தரப்பு வழக்கறிஞர் இது வழக்கிற்கு தேவையில்லாத கேள்வி என்றும், எதிர் வழக்குரையில் சொல்லப்படாத விசயத்தை வழக்கறிஞர் கேட்பது தவறு

என்றும், இந்த கேள்வி நிராகரிக்கத்தக்கது என்றும் கடுமையான ஆட்சேபனை செய்தார். நீதிமன்றம் குற்றவியல் வழக்குகளுக்கு இந்த வழக்கில் சாட்சியம் திரட்டக்கூடாது என்று அறிவுறுத்திய போது கற்றறிந்த பிரதி வழக்கறிஞர் அவருக்கு குறுக்கு விசாரணை பாடம் எடுக்ககூடாது என்றும், குறுக்கு விசாரணை செய்யமுடியாது என்றும் கூறினார்).

பின்பு மதியம் 02.30 மணிக்கு பிரதி ஆஜராகி கேட்டுக்கொண்டதால் குறுக்கு விசாணைக்காக ஒத்திவைக்கப்படுகிறது.